©
GOVERNMENT OF TAMIL NADU
2014

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 3.20 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**PUBLISHED BY AUTHORITY**

No. 40] CHENNAI, WEDNESDAY, OCTOBER 22, 2014
Aippasi 5, Jaya, Thiruvalluvar Aandu – 2045

# Part II—Section 1

**Notifications or Orders of specific character or of particular interest to the public issued by Secretariat Departments.**

## NOTIFICATIONS BY GOVERNMENT

## CONTENTS

*Pages.*

**வருவாய்த் துறை**

நீலகிரி மாவட்டம், குன்னூர் வருவாய் கோட்டத்தை இரண்டாகப் பிரித்து புதியதாக உதகமண்டலம் வருவாய் கோட்டம் உருவாக்குதல் பற்றிய அறிவிக்கை .. 42-47

## NOTIFICATIONS BY GOVERNMENT

### வருவாய்த் துறை

*தலைமைச் செயலகம், 2014 அக்டோபர் 22*

**நீலகிரி மாவட்டம், குன்னூர் வருவாய்க் கோட்டத்தை இரண்டாகப் பிரித்து புதியதாக உதகமண்டலம் வருவாய்க் கோட்டம் உருவாக்குதல் பற்றிய அறிவிக்கை**

No.II(1)/REV/36/2014.

[ஆட்சி எல்லை – நீலகிரி மாவட்டம் –குன்னூர் வருவாய் கோட்டத்தை இரண்டாகப் பிரித்து புதியதாக உதகமண்டலம் வருவாய்க் கோட்டம் உருவாக்குதல் – நிதி ஒதுக்கீடு – பணியிடங்கள் உருவாக்கி ஆணை வெளியிடப்படுகிறது.]

கீழ்க்கண்ட அரசாணை வெளியிடப்படுகிறது.—

*[அரசாணை (நிலை) எண் 439, வருவாய் [வ.நி.1(1)]த் துறை, 7 அக்டோபர் 2014.]*

**படிக்கப்பட்டது:—**

1. அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள் 9–6–2003.
2. மாவட்ட ஆட்சியர், நீலகிரி கடித எண் ந.க.அ1/6849/2013, நாள் 14–2–2014.
3. கூடுதல் தலைமைச் செயலர் (ம) வருவாய் நிருவாக ஆணையர் கடித எண் பணி 6(4)/17871/2013, நாள் 27–2–2014.

**ஆணை: எண் 439, வருவாய் [வ.நி. 1(1)]த் துறை, 7 அக்டோபர் 2014.**

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாட்டிலுள்ள மாவட்டங்கள், கோட்டங்கள் மற்றும் வட்டங்கள் பிரிப்பது தொடர்பாக மக்கள் தொகை, பரப்பளவு மற்றும் வருவாய் கிராமங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அளவுகோல் நிர்ணயித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 13–2–2014 அன்று 2014–15 ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் வெளியிட்ட அறிவிப்பில் நீலகிரி மாவட்டம், குன்னூர் வருவாய் கோட்டத்தை இரண்டாகப் பிரித்து புதிதாக உதகமண்டலம் வருவாய் கோட்டம் உருவாக்கப்படும் என்று அறிவித்துள்ளார்கள்.

3. மேற்கண்ட அறிவிப்பிற்கிணங்க, பார்வை இரண்டில் படிக்கப்பட்ட நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவரின் அறிக்கையின் அடிப்படையில், பார்வை மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் புதிய உதகமண்டலம் வருவாய்க் கோட்டம் உருவாக்குவது தொடர்பாக தனது அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

(i) அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள் 9–6–2003–ன்படி, குன்னூர் வருவாய்க் கோட்டத்தைப் பிரித்து உதகமண்டலம் தலைமையிடமாகக் கொண்டு புதிய கோட்டம் அமைக்க அரசு நிபந்தனைகளின்படி உதகமண்டலத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய கோட்டம் அமைக்க பரிசீலிக்கலாம் என்றும், தற்போதுள்ள குன்னூர் வருவாய் கோட்டத்தில் 42 வருவாய் கிராமங்கள் அமைந்துள்ளதாகவும், இதில் உதகமண்டலத்தை தலைமையிடமாகக் கொண்டு அமையவிருக்கும் புதிய கோட்டத்தில் உதகமண்டலம் மற்றும் குந்தா ஆகிய இரண்டு வட்டங்களை உள்ளடக்கியதில் 19 வருவாய் கிராமங்கள் அமைய உள்ளன எனவும், குன்னூர் வருவாய் கோட்டத்தின் மொத்த பரப்பளவு 2147.50 ச.கி.மீ. ஆகும் எனவும், குன்னூர் வருவாய் கோட்டத்தின் மொத்த மக்கள் தொகை 5,03,998 ஆகும் எனவும், இதில் புதிய உதகமண்டலம் கோட்டத்தின் மக்கள் தொகை 2,37,954 ஆகும் எனவும், புதிய கோட்டத்தின் உத்தேசப் பரப்பளவு 11,96.89 ச.கி.மீ. ஆகும் எனவும் தெரிவித்துள்ளார்.

(ii) குன்னூர் வருவாய் கோட்டத்தைப் பிரித்து புதிய உதகமண்டலம் கோட்டம் உருவாக்குதல் குறித்த நிலைப் படிவம் பின்வருமாறு அமைந்துள்ளது—

| *வ. எண்.* | *ஆட்சி எல்லை விளக்கங்கள்* | *தற்போது உள்ளபடி கோட்டம் குன்னூர்.* | *உத்தேச பிரிவினைக்கு பின் கோட்டம்* உத்தேசிக்கப்பட்ட கோட்டம். உதகமண்டலம் | *எஞ்சியகோட்டம் குன்னூர்* | *அரசாணை எண் 279, வ.து., நாள் 9–6–2003–ன்படி குறித்த நிலை.* |
|---|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* | *(6)* |
| 1 | தலைமையிடம் | குன்னூர் | உதகமண்டலம் | குன்னூர் | |
| 2 | பரப்பளவு (ச.கி.மீ.) | 2147.50 ச.கி.மீ. | 1196.89 ச.கி.மீ. | 950.61 ச.கி.மீ. | குறைந்த அளவு 1000 ச.கி.மீ. அதிகளவு 4500 ச.கி.மீ. |
| 3 | மக்கள் தொகை | 503998 | 237954 | 266044 | குறைந்த அளவு 4,00,000 முதல் அதிக அளவு 15,00,000 |
| 4 | வருவாய் கோட்டத்தின் பெயர் | குன்னூர் | உதகமண்டலம் | குன்னூர் | |
| 5 | சட்டமன்ற தொகுதியின் பெயர் | 108<br>110 | உதகமண்டலம்<br>குன்னூர் | உதகமண்டலம் | |
| 6 | பாராளுமன்ற தொகுதியின் பெயர் | 19–நீலகிரி | 19–நீலகிரி | 19–நீலகிரி | |

| வ. எண். | ஆட்சி எல்லை விளக்கங்கள் | தற்போது உள்ளபடி கோட்டம்<br>குன்னூர் | உத்தேச பிரிவினைக்கு பின் கோட்டம்<br>உத்தேசிக்கப்பட்ட கோட்டம்.<br>உதகமண்டலம் | எஞ்சியகோட்டம்.<br>குன்னூர் | அரசாணை எண் 279, வ.து., நாள் 9–6–2003–ன்படி குறித்த நிலை. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 7 | நகராட்சி எண்ணிக்கை/பெயர் | 1. உதகமண்டலம்<br>2. குன்னூர் | உதகமண்டலம் | குன்னூர் | |
| 8 | ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை (பெயருடன்) | 1. உதகமண்டலம்<br>2. குன்னூர்<br>3. கோத்தகிரி | உதகமண்டலம் | குன்னூர்<br>கோத்தகிரி | |
| 9 | சிறப்பு பஞ்சாயத்துகளின் எண்ணிக்கை (பெயருடன்) | 1. பாலகொலா<br>2. இத்தலார்<br>3. முள்ளிகூர்<br>4. மேலூர்<br>5. ஜக்கனாரை<br>6. கொணவக்கரை | 1. பாலகொலா<br>2. இத்தலார்<br>3. முள்ளிகூர் | 4. மேலூர்<br>5. ஜக்கனாரை<br>6. கொணவக்கரை | |
| 10 | வட்டங்களின் எண்ணிக்கை/பெயர் | 1. உதகமண்டலம்<br>2. குன்னூர்<br>3. கோத்தகிரி<br>4. குந்தா | 1. உதகமண்டலம்<br>2. குந்தா | 1. குன்னூர்<br>2. கோத்தகிரி | குறைந்த அளவு 2 வட்டங்கள் |
| 11 | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | **42**<br>1. உதகை 12<br>2. குன்னூர் 08<br>3. கோத்தகிரி 15<br>4. குந்தா 07<br>**42** | **19**<br>1. உதகை 12<br>2. குந்தா 07<br>**19** | **23**<br>1. குன்னூர் 08<br>2. கோத்தகிரி 15<br>**23** | குறைந்த அளவு 100 கிராமங்கள் |
| 12 | கிராம பஞ்சாயத்துகள் எண்ணிக்கை | 31 | 14 | 17 | |
| 13 | தலைமையிடத் திலிருந்து வெகு தொலைவிலுள்ள கிராமத்தின் தூரம் | தெங்குமரஹடா–75கி.மீ<br>மாயார்–48 கி.மீ.<br>கிண்ணக்கொரை 63 கி.மீ.<br>மேலூர்–26 கி.மீ. | மாயார்–30 கி.மீ.<br>கிண்ணக்கொரை 63 கி.மீ. | தெங்குமரஹடா–75கி.மீ.<br>மேலூர்–26 கி.மீ. | |

4. கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் தனதறிக்கையில், தற்போது பயன்படுத்தப்படாமல் காலியாகவுள்ள வேளாண்மை வருமானவரித் துறை அலுவலகத்தை புதியதாக தோற்றுவிக்கப்படவுள்ள உதகமண்டலம் வருவாய்க் கோட்டத்திற்கு பயன்படுத்தி கொள்ளலாம் என்றும், அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள் 9–6–2003–ல் நிர்ணயிக்கப்பட்ட அளவுகோலில் பரப்பளவு தவிர, மக்கள்தொகை மற்றும் வருவாய் கிராமங்கள் பூர்த்தி செய்யவில்லை என்றும், இருப்பினும் மேற்கண்ட அரசாணையில் குன்றுகள் நிறைந்த மலைப்பாங்கான பகுதிகளுக்கு மேற்கண்ட அளவுகோல்களை செயல்படுத்த வேண்டாம் என்றும் தெரிவித்துள்ளார்.

5. மேலும், கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் தனதறிக்கையில், உதகமண்டலம் மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையினை ஏற்று, குன்னூர் வருவாய் கோட்டத்தினைப் பிரித்து புதிய உதகமண்டலம் வருவாய் கோட்டம் உருவாக்க பரிந்துரை செய்து அதற்குரிய அரசாணையை பெற்றுத் தருமாறும், உதகமண்டலம், வருவாய் கோட்டத்திற்கு 17 பணியிடங்கள் தோற்றுவிக்க ஒப்பளிப்பு செய்தும், தொடரும் செலவினமாக ரூ. 63,82,000/– (ரூபாய் அறுபத்து மூன்று இலட்சத்து எண்பத்திரண்டாயிரம் மட்டும்) மற்றும் தொடரா செலவினமாக ரூ. 60,40,000/– (அறுபது இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணை வழங்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

**6.** மேற்கூறிய சூழ்நிலையில், கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையரின் பரிந்துரையை அரசு நன்கு ஆய்வு செய்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.

(i) நீலகிரி மாவட்டம், குன்னூர் வருவாய் கோட்டத்தினை பிரித்து புதிய உதகமண்டலம் வருவாய் கோட்டம் உருவாக்கப்படுகிறது.

(ii) புதியதாக உருவாக்கப்படவுள்ள உதகமண்டலம் வருவாய் கோட்டத்திற்கு கீழ்க்கண்டவாறு மொத்தம் **11** பணியிடங்கள் ஒப்பளிக்கவும், இதில் **5** பணியிடங்கள் மறுபரவலமர்த்தல் மூலமும், **6** பணியிடங்கள் புதியதாக உருவாக்க ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

| *வ.எண்.* | *பணியிடத்தின் பெயர்.* | *Standard Pattern–ன்படி ஒப்பளிப்பு செய்யவேண்டிய பணியிடங்கள்.* | *மறுபரவலமர்த்தல் மூலம் உதகமண்டலம் வருவாய் கோட்டத்திற்கு மாற்றம் செய்யப்பட உள்ள பணியிடங்கள்.* | *உதகமண்டலம் வருவாய் கோட்டத்திற்கு தோற்றுவிக்கப்பட வேண்டிய பணியிடங்கள்.* |
|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* |
| 1 | வருவாய் கோட்ட அலுவலர் (ரூ. 15600–39100 + G.P. 5400) | 1 | – | 1 |
| 2 | வருவாய்கோட்ட அலுவலரின் நேர்முக உதவியாளர் (வட்டாட்சியர் நிலை) (ரூ. 9300–34800+ G.P. 5100) | 1 | – | 1 |
| 3 | தலைமை உதவியாளர் (துணை வட்டாட்சியர் நிலை) | – | – | – |
| 4 | உதவியாளர் (ரூ. 5200–20200 + GP 2800) | 3 | 3 | – |
| 5 | இளநிலை உதவியாளர் (ரூ. 5200–20200 + GP 2800) | 2 | 1 | – |
| 6 | சுருக்கெழுத்தர் | – | – | – |
| 7 | தட்டச்சர் (ரூ. 5200–20200 + GP 2400) | 1 | – | 1 |
| 8 | பதிவறை எழுத்தர் (ரூ. 4800–10000 + GP 1400) | 1 | – | 1 |
| 9 | ஓட்டுநர் (ரூ.5200–20200 + GP 2400) | 1 | – | 1 |
| 10 | அலுவலக உதவியாளர் (ரூ.4800–10000 + GP 1300) | 2 | 1 | 1 |
| 11 | இரவுக் காவலர் (ரூ.4800–10000 + GP 1300) | 1 | – | – |
| 12 | மசால்சி (ரூ.4800–10000 + GP 1300) | – | – | – |
| | **மொத்தம் :** | 13 | 5 | 6 |

(iii) புதியதாக உருவாக்கப்படவுள்ள உதகமண்டலம் கோட்டத்திற்கு கீழ்க்கண்டவாறு ஒரு வருடத்திற்கு ஏற்படும் தொடரும் செலவினம் ரூ.**15,33,300/–** (ரூபாய் பதினைந்து இலட்சத்து முப்பத்து மூன்றாயிரத்து முன்னூறு மட்டும்) மற்றும் தொடரா செலவினமாக ரூ.**38,37,600/–** (ரூபாய் முப்பத்தெட்டு இலட்சத்து முப்பத்தேழாயிரத்து அறுநூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

**I. தொடரும் செலவினங்கள்:**

| *வ.எண்.* | *விவரம்.* | *ஒப்பளிப்பு செய்யக் கோரும் தொகை (ரூ).* | *ஒப்பளிப்பு செய்யும் தொகை (ரூ.) (ஆண்டிற்கு)* |
|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* |
| 1 | பணியாளர்களின் ஊதியம் மற்றும் படிகள் (ஆண்டொன்றுக்கு) | 60,00,000 | 12,88,800 (6 பணியிடங்கள்) |
| 2 | வாடகை | — | — |
| 2 | மின்சாரக் கட்டணம் (ஆண்டொன்றுக்கு) | 2,10,000 | 1,20,000 |
| 3 | எரிபொருள் (டீசல்) (ஆண்டொன்றுக்கு) (165 லி. ரூ.50 X 12 மாதங்கள்) | 99,000 | 99,000 |
| 4 | தொலைபேசி கட்டணம் (ஆண்டொன்றுக்கு) | 58,000 | 25,500 |
| 6 | ஈப்பு பராமரிப்பு செலவு | 7,000 | — |
| 7 | கணினி பராமரிப்பு செலவு | 8,000 | — |
| | **மொத்தம் :** | **63,82,000** | **15,33,300** |

**II. தொடரா செலவினங்கள்:**

| *வ.எண்* | *விவரம்* | *ஒப்பளிப்பு செய்யக் கோரும் தொகை (ரூ.)* | *ஒப்பளிப்பு செய்யும் தொகை (ரூ.)* |
|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* |
| 1 | அலுவலக கட்டிடம் | — | — |
| 2 | கோட்டாட்சியர் குடியிருப்பு | 45,00,000 | 28,11,600* |
| 3 | தளவாடங்கள் | 5,00,000 | 2,00,000 |
| 4 | ஈப்பு | 6,00,000 | 6,00,000 |
| 5 | தொலைபேசி இணைப்பு | 10,000 | 6,000 |
| 6 | கணினி | 2,10,000 | 75,000 |
| 7 | பிரிண்டர் (அச்சுப்பதிப்பு) இயந்திரம் | 70,000 | 25,000 |
| 8 | ஜெராக்ஸ் (நகல்) இயந்திரம் | 80,000 | 65,000 |
| 9 | பேக்ஸ் | 15,000 | 10,000 |
| 10 | குளிர்சாதனம் | 35,000 | 25,000 |
| 11 | தீயணைப்பான் | 20,000 | 20,000 |
| | **மொத்தம் :** | **60,40,000** | **38,37,600** |

**(Rs.25.56 Lakhs sanctioned for the year 2013-14 + 10% increase)*

7. மேலே பத்தி 6(iii)—இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினங்கள் பின்வரும் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

**(அ) பணியாளர் சம்பளங்கள் ரூ.1,000/—**

**வருவாய் பணியிடங்கள்**

2053—00 மாவட்ட நிருவாகம் — 094 ஏனைய பணியாளரமைப்பு —I
திட்டத்தில் சேராதது —AA — உட்கோட்ட பணியாளரமைப்பு

(i) 01 சம்பளங்கள்

(த.தொ.கு. 2053 00 094 AA 0104)

(ii) 05 அலுவலக செலவுகள் 01 தொலைபேசி கட்டணங்கள் ரூ.31500/–

(தொடரும் செலவினம் ரூ.25,500/– மற்றும் தொடராச்செலவினம் ரூ.6000/–)

(த.தொ.கு.2053 00 094 AA 0515)

(iii) 05 அலுவலக செலவுகள் 03 மின் கட்டணங்கள்

(த.தொ.கு.2053 00 094 AA 0533)

(iv) 05 05 அறைகலன்கள் ரூ. 2,00,000/–
05 அலுவலகச் செலவுகள் 05 அறைகலன்

(த.தொ.கு.2053 00 094 AA 0551)

(v) 19 இயந்திரமும் சாதனமும் 01 வாங்குதல் ரூ.1,20,000/–

(த.தொ.கு.2053 00 094 AA 1916)

(vi) 21 மோட்டார் வண்டிகள் 01 வாங்குதல் ரூ.6,00,000/–

(த.தொ.கு.2053 00 094 AA 2111)

(vii) 45–00 பெட்ரோலிய எண்ணெய் மற்றும் மசக்கெண்ணெய் ரூ.99,000/–

(த.தொ.கு.2053 00 094 AA 4502)

(viii) 76 கணினியும் துணை பாகங்களும் 01 வாங்குதல் ரூ.1,00,000/–

(த.தொ.கு.2053 00 094 AA 7616)

**(II) கோட்டாட்சியர் குடியிருப்பு ரூ.28,11,600/–**

4216 வீட்டுவசதி குறித்த மூலதனச் செலவு –01 அரசு குடியிருப்புக் கட்டடங்கள் – 106 பொது தொகுப்பு இட வசதி – பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II. மாநில திட்டம் – JC வருவாய்த் துறை – வீட்டுவசதித் திட்டங்கள் – 16 பெரும்பணிகள்.

(த.தொ.கு.4216 01 106 JC 1601)

8. மேலே பத்தி 6–இல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள செலவினம் ஒரு புது துணைப்பணித் திட்டமாகும் (New Instrument of Services). இதற்கான சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதலில் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக ஒப்பளிப்பு செய்யப்படும். இதற்கான ஆணை நிதி (வ.செ.பொது.1)த் துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்புதல் செய்ய உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வ.ச.பொது.1)த் துறைக்கு விண்ணப்பிக்குமாறு கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், சென்னை–5, அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இச்செலவினத்தை 2014–2015 துணை மானியக் கோரிக்கையில் (Supplementary Estimate) சேர்க்கும்பொருட்டு உரிய வரைவு விளக்கக் குறிப்பினை தவறாமல் உரிய நேரத்தில் நிதி(வ.செ.பொது–I/வருவாய்)த் துறைக்கு அனுப்புமாறு கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இந்த ஆணையின் இணைப்பு–I–இல் கண்டுள்ள அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும். இப்புதிய உதகமண்டலம் கோட்டம் 7–10–2014–ஆம் நாள் முதல் செயல்படும்.

10. புதிய உதகமண்டலம் வருவாய் கோட்டம் உருவாக்குவது குறித்து, மேலே பத்தி 6–இல் தெரிவிக்கப்பட்டுள்ள ஆணையினை செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

11. இந்த அரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண் 54462/மை.ம.ஆ.பி/14, நாள் 30–9–2014 இசைவுடன் வெளியிடப்படுகிறது மற்றும் கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண் 1192 (ஆயிரத்து நூற்று தொண்ணூற்று இரண்டு).

(ஆளுநரின் ஆணைப்படி)

## இணைப்பு – I

*[அரசாணை (நிலை) எண் 439, வருவாய்த் துறை, நாள் 7–10–2014.]*

### அறிவிக்கை

தமிழ்நாடு அரசு இதனால் அறிவிப்பது யாதெனில், நீலகிரி மாவட்டத்தில் குன்னூர் வருவாய் கோட்டத்தை இரண்டாகப் பிரித்து புதிய உதகமண்டலம் வருவாய் கோட்டம் 2014 ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள் 7–ஆம் நாளிலிருந்து கீழ்க்கண்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வட்டங்களைத் தனது ஆட்சி எல்லைகளாகக் கொண்டு செயல்படும்.

2. புதியதாக உருவாக்கப்படும் உதகமண்டலம் வருவாய் கோட்டத்தில் உள்ளடங்கும் வட்டங்கள், அவ்வட்டங்களில் அடங்கும் வருவாய் கிராமங்கள்மீது தற்போது குன்னூர் வருவாய் கோட்டாட்சியரால் கையாளப்படும் அதிகாரங்கள் இனி உதகமண்டலம் வருவாய் கோட்டாட்சியரால் 2014 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 7–ஆம் நாளிலிருந்து கையாளப்படும்.

### அட்டவணை

| *வ.எண்.* | *வருவாய் கோட்டத்தின் பெயர்.* | *வட்டங்களின் பெயர்.* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 1 | உதகமண்டலம் | 1. உதகமண்டலம் |
| | | 2. குந்தா. |

(ஆளுநரின் ஆணைப்படி)

**ககன்தீப் சிங் பேடி,**
*அரசுச் செயலாளர்.*

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU